கட்டடங்கள், இடிந்துபோய் இருக்கிற பழைய கட்டடங்களுக்குப் புதிய கட்டடங்கள் வேண்டும் என்று பல கோரிக்கைகள் இருக்கின்றன. இந்தத் துறைக்கு ஒதுக்கியிருக்கும் நிதியின் அடிப்படையில் அவை குறித்து வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிவானந்தம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

**27—**

குடமுழுக்கு

*__8710__—**திரு. ஆர். சிவானந்தம்:**

*மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஆரணி தொகுதி, காமக்கூர் கிராமத்தில் ஈஸ்வரன் கோயில் கோபுரத்தைச் சீரமைத்துக் குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*ஆரணி தொகுதி, காமக்கூர் கிராமத்திலுள்ள ஈஸ்வரன் கோயில் கோபுரத்தைச் சீரமைக்க ரூ.12.85 இலட்சத்தில் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. திருப்பணி வேலைகள் முடிவுற்றவுடன் குடமுழுக்கு நடத்தப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவானந்தம்.*

**திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரசித்திப் பெற்ற கோயில் 13 ஆம் நூற்றாண்டில் சோழர் காலத்தில் கட்டபப்பட்ட கோயில் என்று கூறுகிறார்கள். உலகிலேயே நடராஜர் சிலை இரண்டு கால்களோடு சதுர்தாண்டவம் ஆடுகின்ற சிலை இங்கேதான் இருப்பதாகச் சொல்கிறார்கள். இந்தக் கோயிலில் நீண்டகாலமாகப் பழுதடைந்துள்ள பெரிய தேர் ஓடாத நிலையில் இருக்கிறது. அந்தத் தேரையும் புதுப்பித்துத்தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

2007 ஏப்ரல் 9]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் திருப்பணி முடிவுற்றவுடன் குடமுழுக்கு நடத்துவது முடிவுற்று, அதன்பிறகு தேருக்கான கேள்வியை அவர்கள் தனியாகக் கேட்பார்களேயானால், அதற்குப் பதில் அளிக்கத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**28—**

**வன ஆராய்ச்சி மையம்**

***11604—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை வனச் சரகத்தில் வன ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தேன்கனிக்கோட்டை வனச் சரகத்தில் தேன்கனிக்கோட்டை, மரகட்டா மற்றும் கோபசத்திரம் ஆகிய மூன்று இடங்களில் வன ஆராய்ச்சி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் கோபசத்திரம், ஓசூர் சட்டமன்றத் தொகுதியிலும், மரகட்டா, தேன்கனிக்கோட்டை வன ஆராய்ச்சி மையங்கள் தளி சட்டமன்றத் தொகுதியிலும் இயங்கி வருகின்றன. இப்படி இரண்டு வன ஆராய்ச்சி மையங்கள் அந்தத் தொகுதியில் இருக்கின்ற காரணத்தினால், மேலும் ஒரு வன ஆராய்ச்சி மையம் உருவாக்குகின்ற கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள என்னுடைய தளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தேன்கனிக்கோட்டை வனச் சரகம் அடர்ந்த